DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 486/2022

Prosecution witness – PW.5

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.மாரிமுத்து | Caste: | |
| Father's Name | : சின்னதம்பி | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

22.10.2025 – 11.05 AM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

நான் நரசிங்கம்பட்டி கிராமத்தில் குடியிருந்து கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். அவர் உள்ளூர்காரரர். வழக்கு சம்பவத்தில் இறந்து போன தேவதாஸ் என்பவரை தெரியாது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் நானும் ஆஜர் எதிரியும் இரு சக்கர வாகனத்தில் பார்த்திபனூர் சென்று கொண்டிருந்தபோது கள்ளிக்குளம் விலக்கு ரோட்டில் ஆஜர் எதிரியான முத்துராஜா இருசக்கர வாகனத்தை விலக்கில் திருப்பும் போது வாகனம் சரிக்கி கீழே விழுந்து விட்டோம். அதில் நானும் எதிரியும் கீழே விழுந்துவிட்டோம். எங்கள் இருவருக்கும் காயம்பட்டது. இறந்து போன தேவதாஸ் என்பவர் எப்படி இறந்தார் என்பது எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

கடந்த 26.10.2015ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த முருகன் என்பவரும் சொந்த வேலையாக ஆஜர் எதிரியுடன் அவருக்கு சொந்தமான TN 65 W 7995 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda splender+ இரு சக்கர வாகனத்தில் செய்யாமங்களத்திலிருந்து அபிராமம் நோக்கி சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரே அபிராமத்திலிருந்து

பார்த்திபனூர் செல்லும் மெயின் ரோட்டில் கள்ளிக்குளம் விலக்குரோட்டில் ஆஜர் எதிரியானவர் இரு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்றார் என்றால் சரியல்ல. எதிரி அதிவேகமாக வாகனத்தை ஓட்டியதில் அதே ரோட்டில் வந்து கொண்டிருந்த TN 65 E 7052 என்ற பதிவு எண் கொண்ட Splender+ வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், விபத்தில் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த தேவதாஸ் என்பவருக்கு தலையில் பலத்த காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாகவும், விபத்தில் எனக்கும் என்னுடன் பயனித்த முருகன் என்பவருக்கும் வாகனத்தை ஓட்டி வந்த ஆஜர் எதிரிக்கும் காயம் ஏற்பட்டதாகவும் போலீசார் விசாரித்த போது சொல்லிவிட்டு எதிரி உறவினர் என்பதால் எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில் தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.10.22 17:28:00 +0530